# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் - பேரறிஞர் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ அறிக்கை!



திருவள்ளூர், பிப்.3-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

பிப்ரவரி திங்கள் மூன்றாம் நாள் இந்நாட்டு பெர்னாட்ஷா, தென்னாட்டு காந்தி அறிவுலக மாமேதை காஞ்சி தந்த திராவிடர் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு இன்று காலை 9.00 மணியளவில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்குட்ட கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிகளில் உள்ளடங்கிய ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள், கிளைக் கழகங்கள், வார்டுகள் தோறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருப்படத்தை மலர்களால் அலங்கரித்து ஒலிபெருக்கி மூலம் அண்ணாவின் கொள்கைகளை ஒலிபரப்பி திருஉருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா சுய மரியாதை திருமணத்தை சட்டமாக்கியவர், ஆங்கிலம், தமிழ் என மாநிலத்தில் இருமொழிக் கொள்கையை செயல்படுத்தியவர், சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என் பெயர் சூட்டி வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றியவர். முத்தான மூன்று சட்டங்கள் தமிழ் நாட்டிற்கு தந்த தமிழ் மொழிக் காவலர் பேரறிஞர் அண்ணாவின் நினைவைப் போற்றிடும் வகையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் கும்முடிப்பூண்டி பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருஉருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராசன் அவர்களின் தலைமையில் இன்று (03.02.2025 - திங்கட்கிழமை) காலை 9.00 மணியளவில் மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறும்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, மாநில, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் பங்கேற்குமாறு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நெல்லை மத்திய மாவட்டத்தில் - அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!



நெல்லை, பிப்.3-

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத்தலைவர் உலகத்தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும் தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர்,மிகப் பெரிய அரசியல் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நெல்லை சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் முழு திருவுருவக் சிலைக்கு இன்று 3 ம் தேதி காலை 9 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

ஆகவே நிகழ்வில் இந்நாள்,முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு அன்னாரது நினைவை போற்றிட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எஸ். முருகேசன்

**பிப்ரவரி 3 (2004)**



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1977ல் திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. காஜாமொய்தீன்

**பிப்ரவரி 3 (2018)**



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணி பகுதி பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்து, மாநில சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ - க.தனசேகரன் எம்.சி - மு.ராசா எம்.சி. முன்னிலை!

# கலைஞர் நகர் 128 வது வட்டக் கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் மு.கோவிந்தராஜன் தலைமை! வே.உமாகாந்த் ஆய்வு!

சென்னை, பிப். 3

கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 128 வது வட்டக் கழகச் செயலாளர் மு. கோவிந்தராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 128 வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் ஆய்வுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, இன்று (03.02.2025 திங்கள்கிழமை) மாலை 5 மணியளவில், பி.கே.வி.நர்சரி பிரைமரி பள்ளி, பச்சையப்பன் கோயில் தெரு, விருகம்பாக் கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் 128 வது வட்டக் கழகச் செயலாளர் மு.கோவிந்தராஜன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கைக் குழுத் தலைவர் க. தனசேகரன் எம்.சி, கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மு. ராசா எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விருகம்பாக்கம் தொகுதிப் பார்வையாளர் வே. உமாகாந்த் ஆய்வு மேற்கொள்கிறார். மேலும், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ் வட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, பகுதி துணைச் செயலாளர் ச.நாகராஜன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் திரளாக கலந்து கொள்ளுமாறு வட்டக் கழகச் செயலாளர் மு.கோவிந்தராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## முதல்வர் தலைமையில்

# அண்ணா நினைவுநாள் அமைதி ஊர்வலம்!


### ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை,பிப்.3-

பேரறிஞர் பெருந்தகை, தென்னாட்டு காந்தி,இன்னாட்டு இங்கர்சால்,அறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு இன்று (திங்கட்கிழமை) 03.02.2025 காலை 7:00 மணியளவில் சென்னை அண்ணாசிலை வாலாஜா சாலையிலிருந்து அண்ணா நினைவுடம் வரை நடைபெறும் அமைதி ஊர்வலத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆணைக்கிணங்க ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், தவறாமல் பெரும் திரளாய் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு 12வது மண்டலகுழு தலைவர் - ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் என்.சந்திரன் தெரிவித்துள்ளார்.

# உயிர்த்திருப்பீர், உளமிருப்பீர், உலகிருப்பீர்!



**கா**ஞ்சியிற் பிறந்தவரே
கல்வியிற் சிறந்தவரே
தீஞ்சுவைத் தமிழாலே
திக்கெட்டும் கவர்ந்தவரே
பூஞ்சையாய்த் தமிழர்கள்
போகாமல் பொலிவதற்கு
வாஞ்சையாய்க் கழகத்தை
வலிமையாய் வளர்த்தவரே!
பூஞ்சோலை, புனலருவி
புலர்காலை போன்றவரே!
ஊஞ்சல்போல் ஆடாமல்
உறுதியாய் உயர்ந்தவரே!

பேரறிஞர் அண்ணா,நீர்
பிறந்ததனால்
அல்லவோ
பாரறியும் தமிழருமை
பழம்பெருமை
தனித்தன்மைச்
சீரறியா நிலையிலே
சிறுத்திருந்த
தமிழரிடம்
ஊறறிய உரைத்தீரே,
உணர்ச்சிமிக அறிவுபெற
நீர்அருவி பொழிந்தீரே,
நெடும்புரட்சி புரிந்தீரே,
காரறியும் இருளான
கல்லாமை அறியாமை
தீரவே வாழ்நாளைத்
தியாகமும் செய்தீரே!

சீர்திருத்தம் பகுத்தறிவு
செம்மாந்த தன்மானம்
ஆர்த்தெழப் பேசியவர், ஆராய்ந்தே எழுதியவர்
பேர்த்தெறிந்தீர் மூடநிலை,
பேதங்கள் சாதிமதம்
நீர்த்தொழியத் தமிழரின்
நினைப்புயர நிலையுயர
வார்த்தெடுத்த நூல்களோ
வலியநெடு வேல்களே!

போர்த்தொழில் புரியாமல்
புத்தியைத் தீட்டுகென்றீர்,
ஈர்த்தவர் உமைப்போல
இளைஞரை இன்றுவரை
பார்த்ததில்லை,கேட்டதில்லை,
பனுவலிலும் படித்ததில்லை
தேர்த்திரு விழாக்கூட்டம்
சிறுத்துவிடும் அளவிலே
ஊர்திரண்டு நின்றதே
உம்வழி சென்றதே,
காத்திருந்து கேட்டதே,
கண்மூட மறந்ததே!

தார்அணிந்த சேரசோழத்
தமிழ்வழுதி வேந்தர்போல்
நீர்எழுந்தீர்,சூரிய
நிழலிலே நிறுத்திவிட்டீர்!
மார்தட்டி நிற்கின்றார்
மக்களெலாம் என்றால்,உம்
கூர்மதி நேர்வழி
கொள்கைமொழி கருத்தொலி
வேராகும், விதையாகும்
விரிந்தபெரு மரமாகும்!

ஏராக உழுதுழுது
எண்ணப்பயிர் வளர்த்தீரே
நாராகக் கிழியாமல்
நரம்பிரும்பாய் ஆக்கினீர்
வீரத்தை உணர்த்தினீர்
வித்தகம் ஊட்டினீர்
நேரத்தைக் காட்டினீர்
நிலைமையை மாற்றினீர்!

யாரிங்கே உமைப்போல
இரவுபகல் காலைமாலை
பாராமல் கழகமெனும்
பாசறையைக்
கண்டவரே,
சேராமல் தமிழரெலாம்
சிதறிய நிலைமாற்றச்
சோராமல் உழைத்தவரே,
சொல்எழுத்தால்
உரைத்தவரே!

சாராமல் வடவரைத்
தறுகண்மை யோடெதிர்த்து
மாறாது ஆட்சியென
மமதையோ டிருந்தோரை
ஈறாக ஒழித்துவிட்டீர்,
எழமுடியா தொடித்துவிட்டீர்,
ஏறாமல் கிடக்கின்றார்
ஏங்கியே நடக்கின்றார்
நீறாகப் போய்விட்டார்
நிமிராமல் சாய்ந்துவிட்டார்,
சூறாவளி யாகவே
சுழன்ற உம் வேகத்தில்
பாறாங்கல் உடைந்தது;
பலபலவாய் உதிர்ந்தது!
மாறாக இங்கெவரும் மலராமல்
செய்துவிட்டீர்;
பேறாகப் பெற்றுள்ளோம்
பெருந்தகையே உமைநாங்கள்
கூறாத நாளில்லை,
கொண்டாடா வேளையில்லை!

வீழ்ந்திருந்த தமிழர்கள்
விசையுற்றே அறிவினால்
தாழ்ந்திருந்த தமிழகத்தைத்
தலைநிமிரச் செய்வதற்கு
வாழ்ந்திருந்த காலமெல்லாம்
வற்றாத கடலாக
ஆழ்ந்திருந்தே எண்ணமெனும்
அலைகளை எழுப்பியே
சூழ்ந்திருந்த தடைகளைச்
சுக்குநூறு ஆக்கினீர்!

சாய்ந்திருந்த கோபுரம்
தலைதூக்கி நிற்பதுபோல்
தேய்ந்திருந்த நிலவொளி
தேயாமல் திகழ்தல்போல்
காய்ந்திருந்த காவிரி
கரைபுரண்டு ஓடுதல்போல்
தீய்ந்திருந்த மரஞ்செடிகள்
திரும்பவும் தளிர்த்தல்போல்
வேய்ந்திருந்த வான்கூரை
வெங்கதிர் வளர்தல்போல்
பாய்ந்தெழுந்து வேங்கையாய்ப்
பகைமுடித்து எழுகின்றார்,
ஓய்ந்திருந்த தமிழர்கள்
ஓங்கியுயர்ந்து
ஏறுகின்றார்!

பெரியாரைப் பிரிந்தாலும்
பெரியாரே தலைவரென
வரித்தவரே, கிஞ்சிற்றும்
வசைபாடா திருந்தவரே,
சிரித்தபடி முரண்களைத்
தீண்டாமல் சென்றவரே,
பெருத்த ஒரு பிள்ளையாரை
உடைக்கமாட்டேன்
பிள்ளையார்க்குப்
பருத்த ஒரு தேங்காயும் உடைக்கமாட்டேன் என்றுநீர்
உரைத்தபெரும் பேரறிவால்
உலகத்தை வியக்கவைத்தீர்!

விரித்தவலை எதிலுமே
வீழாமல் நின்றவரே,
திரித்தநூல் பூண்டோரைத்
தெளிவாக உணர்ந்தவரே,
உரிமையுணர் வுதிரத்தில்
ஓடத்தான் விட்டவரே,
அரிதரிது உம்முடைய
ஆளுமைபோல் அரசியல்
சரித்திரத்தில் காணுதல்
சாலவும் ஒல்லாதே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

திராவிடன்தான் தமிழனெனத்
தெளிவாகச் சொன்னவரே!
பராவியே இவ்வையம்
பண்பட்ட மாந்தனென
உராய்ந்தெழும்
வாள்போல
ஒலிகிளப்பி உரைத்தவரே!
தராவிடில் திராவிடம்
தன்னாட்சி அமையுமென
விராவியே அன்றுநீர்
விளம்பிய வித்தகத்தால்
அறாமலே இன்றுவரை
ஆளவும் வைக்கின்றீர்!

கடலோரம் நீர்உறங்கும்
காரணத்தால் அகன்றபெருங்
கடல்அலைகள்
கரைந்துபோ கின்றனவே!
உடனிருக்கும் கலைஞரும்
ஓயாமல் காக்கின்ற
கடமையைச் செய்வதுபோல்
கண்ணுறக்கம்
கொள்ளாரே!

தடம்மாறாத் தளபதியோ
தவறாமல் நினைந்தும்மை
வடக்கினை எதிர்க்கின்றார்,
வல்லாண்மை மறுக்கின்றார்!
இடக்கினைச் செயுமவரை
எதிர்கொண்டு நிற்கின்றார்!
விடத்தினை முறிக்கின்ற
விந்தையும் உமதன்றோ!
கொடுக்கினை நறுக்குகின்ற
கொள்கைவாள்
கொடுத்தவரே,
படக்கூடாத் துயரங்கள் பட்டபின் தமிழர்கள்
விடக்கூடா துரிமையென
விதிசெய்து முடித்தவரே,
தொடமுடியா உயரத்துச்
சூரியன் நீரன்றோ!

எண்ணாமல் சிலரிங்கே
இல்லைநீர் என்கின்றார்,
அண்ணாநீர்
இருக்கின்றீர்
அகல்வானம் உள்ளவரை,
வெண்கதிர் தண்ணிலவு
வெளிச்சமாய் விளங்குமட்டும்,
எண்ணாமீன் விசும்பிலே
எழிற்சுடர் இலகுமட்டும்,
தண்ணீரால் பெருங்கடல்
ததும்பிடும் வரையிலும்,
உண்ணுநீர் போன்றவரே,
உலவுகாற்று ஆனவரே,
எண்ணத்தில் செயலிலே
எப்போதும் இருப்பீர்நீர்,
மண்ணிலே மக்களின்
மனங்களில் வாழுவீர்!

புண்ணுற்று நீர்போகப்
புவியெலாம் புலம்பியே
கண்ணீரைக் கடலாக்கிக்
கதறியே அழுதழுது
அண்ணாநீர் வாரிரோ,
ஆளாமல் போவிரோ
உண்ணின்றே எழுந்தகுரல்
உயிர்க்காமல் போகுமா?
திண்ணமாய் நீரென்றும்
திகழுவீர் நெஞ்சிலே,
வண்ணமாய் விளங்குவீர்,
வழிநடத்திச் செல்லுவீர்,
பண்மயங்கும் குரலாலே
பார்மயங்கி நின்றபின்
உண்மையாய் உயிர்த்திருப்பீர்,
உளமிருப்பீர்,
உலகிருப்பீர்!